செய்தி வெளியீடு எண்–905 நாள்–14.10.2010

# தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தில் 37 பேர்களுக்கு பணிநியமன ஆணைகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்

* * * * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (14.10.2010) புனித ஜார்ஜ் கோட்டையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தில் மொத்தம் 37 பேர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இதில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் பணிபுரிந்து மறைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் 19 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இதில் 14 இளநிலை உதவியாளர்களுக்கும், 5 நில அளவையாளர் பணியிடங்களுக்கும் ஆணை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தில் தொழில் நுட்ப பிரிவு வரைவாளர் பணியிடங்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 18 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதில் இரண்டு மாற்று திறனாளிகளுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது, மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, மாண்புமிகு குடிசை மாற்றுத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், வீட்டுவசதித்துறைச் செயலாளர் திரு. அசோக் டோங்கரே, குடிசை மாற்று வாரிய நிர்வாக இயக்குநர் திரு. ஏ. ராமலிங்கம், வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக இயக்குநர் (பொறுப்பு) திரு. பங்கஜ் குமார் பன்சால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,செ–9.